Website: http://www.cict.in
Email: director@cict.in

Phone: 044-22540125
Fax: 044-22540143

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)
சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச்சாலை, தரமணி, சென்னை – 600 113

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An autonomous Institution under Ministry of Human Resource Development, Government of India, New Delhi)
The Institute of Road Transport Campus, 100 Feet Road, Taramani, Chennai – 600 113

நாள்: 06.6.2019

## செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் 2018-2019

## முன்மொழிவிற்கான அழைப்பு

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுத் திட்டத்தின்கீழ்ச் செம்மொழித் தமிழுக்குத் தலைசிறந்த பங்களிப்பைச் செய்திருக்கும் சிறந்த அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது. அவ்வகையில் 2018 ஆம் ஆண்டு விருதுகளுக்கான முன்மொழிவுகள் வரவேற்கப்படுகின்றன. கீழ்க்கண்ட அனைத்து விருதுகளும் **இந்தியக் குடியரசுத்தலைவர்** அவர்களால் வழங்கப்படும்.

1. **தொல்காப்பியர் விருது** (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஓர் இந்திய அறிஞருக்கு ஒரு விருது.
2. **குறள் பீடம் விருது** (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் இரு விருதுகள் – அயல் நாட்டவருக்கு ஒன்று, அயல்நாடு வாழ் இந்தியருக்கு ஒன்று.
3. இளம் அறிஞர் விருது (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஐந்து விருதுகள். இவ்விளம்பரத்தின் கடைசித்தேதிக்குள் முப்பது வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்ட இந்திய இளம் அறிஞர்களுக்கு உரியது.

**வழிகாட்டு நெறிமுறைகள் :**

1. பண்டைக்காலம் தொடங்கி கி.பி.600 வரையிலான தமிழியல் சார்ந்த இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடவியல், தொல்பொருளியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல், பண்பாடு முதலிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் விருதுபெறத் தகுதியுடையவை.
2. இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டினுடைய கடவுச்சீட்டு (செல்லுநிலையிலும் நடப்பிலுமுள்ளது) உடையவர் அயல்நாட்டவர் ஆவார்.
3. இந்தியாவின் கடவுச்சீட்டை உடையவரும் இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டில் வாழ்ந்துவருபவருமான ஒருவர் அல்லது முன்பு இந்தியக் குடிமகனாக இருந்து பின்பு வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்றிருக்கின்ற ஒருவர் அயல்நாடு வாழ் இந்தியர் ஆவார்.
4. அறிஞர்களும் மொழி ஆர்வலர்களும் கல்வி/ஆய்வு நிறுவனங்களின் தலைமை அலுவலர்களும் தகுதியுள்ள அறிஞர்களை முன்மொழியலாம்.
5. அறிஞர் எவரும் தம்மைத் தாமே விருதுக்காக முன்மொழிந்துகொள்ளல் கூடாது.
6. முன்மொழிவுகள் வன்படியிலும், மென்படியிலும் அனுப்பப்படுதல் வேண்டும்.
7. முன்மொழிவுகள் **இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், எண். 40, நூறடிச் சாலை, சாலைப்போக்குவரத்து வளாகம், தரமணி, சென்னை – 600 113** என்னும் முகவரிக்கு, **2019 ஜூலை 6**ஆம் நாளிற்குள் அஞ்சல் வழி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**இயக்குநர்**

## செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுகள்
### முன்மொழிவுப் படிவம்

I. **பரிந்துரைக்கப்படும் விருது** (√ செய்க)

| | | |
|---|---|---|
| (அ) | **தொல்காப்பியர் விருது**<br>(இந்தியக் குடிமக்களுக்குரியது) | |
| (ஆ) | **குறள் பீடம் விருது** | |
| | (i) அயல்நாட்டவர் | |
| | (ii) அயல்நாடுவாழ் இந்தியர் | |
| (இ) | **இளம் அறிஞர் விருது** (30-40 வயது வரம்பிற்குள் வரும் இந்திய இளம் அறிஞர்கள்) | |

II. **பரிந்துரைக்கப்படும் துறைகள்** (√ செய்க)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கணம் | | இலக்கியம் | | மொழிபெயர்ப்பு | | நுண்கலைகள் | |
| கட்டடக்கலை | | தொல்லியல் | | கல்வெட்டியியல் | | நாணயவியல் | |
| சுவடியியல் | | பண்பாடு | | மொழியியல் | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| III. | **பரிந்துரைக்கும் அறிஞர் பெயர்** | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | முகவரி<br><br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | | | | | | | | | | | | |

**2018-2019 ஆம் ஆண்டிற்கான பரிந்துரை**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | **பரிந்துரைக்கப்படும் அறிஞர் பெயர்** | | | | | | | | | |
| 2. | முழு முகவரி<br><br>தொலைபேசி எண்<br>மின்னஞ்சல் முகவரி | | | | | | | | | |
| 3. | (அ) பிறந்த நாள் | நாள் | | | மாதம் | | | ஆண்டு | | |
| | | | | | | | | | | |
| | (ஆ) வயது | | ஆண்டுகள் | | | | | | | |

| | | |
|---|---|---|
| 4. | (அ) கல்வித் தகுதிகள் :<br>பல்கலைக்கழகத்தின் பெயர்,<br>ஆண்டு, வகுப்பு/தரம் | |
| | (ஆ) பணிவிவரங்கள் :<br>பணியாற்றிய நிறுவனம், பதவி,<br>பணியாற்றிய காலம் | |
| | (இ) சிறப்பறிவு பெற்றுள்ள துறை | |
| 5. | நூல்கள்/ வெளியீடுகள் :<br>(அ) எழுதியவை<br>(ஆ) பதிப்பித்தவை<br>(இ) மொழிபெயர்த்தவை<br>(நூற்பொருள்/மொழி) | |
| 6. | பரிந்துரைக்கப்படுபவரது வழிகாட்டுதலில் பி.எச்.டி., டி.லிட். பட்டம் பெற்றுள்ள ஆராய்ச்சியாளரின் எண்ணிக்கை | |
| 7. | ஏற்கனவே பெற்றுள்ள சிறப்புகள்<br>(அ) விருது, சிறப்புப்பட்டம் முதலியன<br>(ஆ) ஆண்டு<br>(இ) வழங்கிய நிறுவனம் | |
| 8. | செம்மொழித் தமிழைப் பரப்பும் வகையில் ஆற்றிய சிறப்புப் பங்களிப்புப் பற்றிய விவரங்கள் | |
| 9. | கலந்துகொண்ட மாநாடுகள்/ கவியரங்குகள்/கருத்தரங்குகள் (இடம், நாள், அமைப்பாளர்கள், ஆய்வுக்கட்டுரை போன்ற விவரங்களுடன்) | |

| | | |
|---|---|---|
| 10. | செம்மொழித் தமிழோடு தொடர்புடைய முயற்சிகளிலும் பழந்தமிழ் மரபினையும் இன்றைய வளர்ச்சிகளையும் இணைக்கும் வகையிலும் ஆற்றியுள்ள சாதனைகள் | |
| 11. | இந்த அறிஞரைப் பரிந்துரைப்பதற்கான சிறப்புக் காரணங்கள், வலுவான சான்றுகள், ஏதேனும் இருப்பின்... | |

நாள் :

**பரிந்துரைப்பவரின் கையொப்பம்**

* **குறிப்பு : மேலே ஒதுக்கப்பட்டுள்ள இடம் போதவில்லை என்றால் தனித் தாளில் விவரங்கள் இணைக்கப்படலாம்.**

## நன்னடத்தைச் சான்றிதழ்

_____________________________ என்பவரின் மகன்/மகள், __________________________

________________________________________________________ என்னும் முகவரியில்

குடியிருப்பவர் ஆகிய _______________________ என்னும் நான், ______________________

____________________________________________ என்னும் முகவரியில் குடியிருப்பவரும்

செம்மொழித்தமிழ் விருதுக்கு முன்மொழியப்படுபவரும் ஆகிய திரு/திருமதி/செல்வி

________________________________என்பவரைக் கடந்த _________________________

ஆண்டுகளாக அறிவேன் என்றும் அவர் நல்லொழுக்கம் உடையவர் என்றும் இதன்மூலம் உறுதிகூறுகின்றேன். அவருக்கு எதிராக நீதிமன்ற வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை என்பதோடு கடந்த காலத்தில் ஒருபோதும் அவர்மீது சட்ட நடவடிக்கை தொடரப்பட்டிருக்கவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

(___________________________________________)

**பரிந்துரைப்பவரின் பெயர், கையொப்பம்**

**இடம் :**

**நாள் :**